VIRUDHUNAGAR MUNICIPALITY

FORM 3

Minutes of the Meeting held on 29.04.2022

| Date of Council meeting | Decision Number | Subject of the Agenda | Resolution |
|---|---|---|---|
| 29.04.22 | 25 | **பொருள்1 :**<br>நகராட்சி ஆணையர் அவர்களின் மார்ச் 2022 மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு : பதிவு செய்யலாம்<br>கோப்பு எண் : 3431/2021/சி1 | பதிவு செய்யப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | 26 | **<u>பொருள் -2</u>**<br>இந்நகராட்சியில் தற்பொழுது நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல் முடிக்கப்பட்டு அதன்படி இந்நகராட்சியில் நகர்மன்றத் தலைவர் அவர்கள் நகர்மன்றத் தலைவராக பொறுப்பு ஏற்று பதவி வகித்து வருகிறார்கள்.<br>இந்நகராட்சி தற்போது 6.64 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் உள்ளது. 2011ம் தேதிய கணக்கெடுப்பின்படி இந்நகரின் மொத்த மக்கள் தொகை 72296 ஆகும். விரைவில் சிறப்பு நிலை நகராட்சி அந்தஸ்து பெறும் நிலையில் உள்ளது. இந்நகரில் தற்பொழுது பொதுமக்களுக்கு குடிநீர் விநியோக பணி தாமிரபரணி குடிநீர் திட்டம் மூலம் இந்நகரில் இருந்து சுமார் 120 கிலோ மீட்டர் தொலைவில் (வல்லநாடு தலைமை நீரேற்று நிலையம்) மற்றும் நான்கு வெவ்வேறு இடத்தில் உள்ள நீர் உந்து நிலையங்கள் மற்றும் இந்நகராட்சிக்கு பாத்தியப்பட்ட பிற நீர் உந்து நிலையங்களான ஆனைக்குட்டம்,காருசேரி,ஒண்டிப்புலி,கோடைகால நீர்த்தேக்கங்களை ஆய்வு செய்ய 20 கிலோ மீட்டர் வரை சென்று வரவேண்டியுள்ளது. விருதுநகர், அருப்புக்கோட்டை மற்றும் சாத்தூர் ஆகிய நகராட்சிகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்ட குடிநீர் ஆதாரமான சீவலப்பேரியினை விருதுநகர் நகராட்சியில் இருந்து சுமார் 110 கி.மீ சென்று ஆய்வு செய்யும் நிலையில் உள்ளது. ஆகையால் மேற்படி பணிகளை தொடர் ஆய்வு செய்திடவும், இந்நகராட்சி வளர்ந்து வரும் நகராட்சியாக இருப்பதாலும், நகராட்சியில் பாதாள சாக்கடை திட்டப் பணிகள் இருப்பதாலும் , இந்நகராட்சி விருதுநகர் மாவட்ட தலைமையிட நகராட்சியாக அமையப் பெற்றுள்ளது.எனவே நகர்மன்றத் தலைவர் மற்றும் நகரமைப்பு அலுவலர், நகர் நல அலுவலர்,மேலாளர் மற்றும் வருவாய் அலுவலர் அவர்களுக்குக்கென புதிய டீசல் ஈப்பு வாகனம் 2 எண்ணம் தேவைப்படுகிறது. மேற்கூறிய வாகனத்திற்கு புதிதாக ஒட்டுநர் பணியிடம் ஏதும் தோற்றுவிக்கப்படவில்லை.<br>ஆகையால் அன்னாருக்கு இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வளர்ச்சி பணிகள்,குடிநீர் திட்ட பணிகள்,தெரு விளக்கு பணிகள் மற்றும் அடிப்படை வசதி பணிகளை பொதுமக்களின் கோரிக்கைகளின் பேரில் நகர்மன்றத் தலைவர் அவர்களால் நேராய்வு செய்வதற்கும் மற்றும் நகராட்சி அலுவலர்களுக்கெனவும் புதிய வாகனம் 2 எண்ணத்திற்கு புதிதாக அரசு நிர்ணயம் செய்யப்பட்ட விலையில் உத்தேசத் தொகையாக ரூ.20,00,,000/–த்தினை அரசு மான்ய நிதியில் கொள்முதல் செய்திடுவதற்கும், மேலும் புதிய ஈப்பிற்கு உண்டான சாலை வரி, காப்பீட்டுத் தொகை மற்றும் கூடுதல் உதிரி பாகங்கள் வாங்குவதற்கும் உண்டான செலவினத்தை மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதி | மன்றம்<br>அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | கோரப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு : அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி 2 எண்ணம் ஈப்புகளை அரசு விலையில் வாங்குவதற்கும், மேல் நடவடிக்கை எடுப்பதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>கோப்பு எண்–1593/22/இ1 | |
| | 27 | **<u>பொருள் -3</u>**<br>இந்நகராட்சியில் 15வது நிதிக்குழு கட்டிய மானியம் 2021–22 –கோடை கால சேமிப்பு தொட்டியில் பம்பிங் மெயின் மாற்றும் பணி (மதிப்பீடு ரூ. 50.00இலட்சம்.),15வது நிதிக்குழு கட்டப்படாத மானியம் 2021–22 –ஆனைக்குட்டம் தலைமை நீரேற்று நிலைய வளாகத்திற்கு சுற்றுச் சுவர் கட்டுதல் (மதிப்பீடு ரூ. 35.00இலட்சம்.) மற்றும் எம்.எஸ்.பி.இராவ் பகதூர் உயர்நிலைப் பள்ளி வளாகத்தில் நகர்ப்புற சுகாதார மற்றும் ஆரோக்கிய மையம் 2021–22 (மதிப்பீடு ரூ. 25.00இலட்சம்.) கட்டிடம் கட்டும் பணிக்கு **12.04.2022 தேதியில் வரப்பெற்ற மின்னனு ஒப்பந்தப்புள்ளிகளை** மாவட்ட அளவில் தினமணி தினசரி நாளிதழில் வெளியிட்டமைக்கு உண்டான செலவினத் தொகை ரூ.5,939/–யை வழங்கக் கோரி Express Publications (Madurai) Private Limited அவர்களிடமிருந்து பில் பட்டியல் தொகை வரப்பெற்றுள்ளது. மேற்படி தொகையினை பொது நிதியின் கீழ் வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு– மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>கோப்பு எண்.5145–3/2021/இ1 | மன்றம்<br>அனுமதிக்கப்பட்டது |
| | 28 | **<u>பொருள் -4</u>**<br>தூய்மை இந்தியா திட்டம் விருதுநகர் நகராட்சி பகுதிகளில் சேகரமாகும் திடக்கழிவுகளை திடக்கழிவு மேலாண்மை விதிகளின் படி முறையை தரம் பிரித்து பணி மேற்கொள்ளப்பட்டு வருவது குறித்து அறிவிப்பு இந்து தமிழ் நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது, அதற்கு ஆகும் செலவினத் தொகை ரூ.8,652/– யை மேற்படி நாளிதலுக்கு வழங்கிட மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு :– மன்றம் அனுமதிக்கலாம்.<br>கோப்பு எண்.3945/2020 /எச்1 | மன்றம்<br>அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | 29 | **பொருள் -5**<br><br>விருதுநகர் நகராட்சி 2022-23-ம் ஆண்டிற்கு அலுவலக உபயோகத்திற்கு தேவையான பல்வகைப்பட்ட கணினி இரசீதுகள் அனைத்து வகையான பதிவேடுகள் அனைத்து வகையான படிவங்கள் ஜெராக்ஸ் மிஷின் டோனர்கள், கணினிக்கு தேவையான அனைத்து வகையான டோனர்கள் Log Book, A4 Size பேப்பர்கள் , Legal Size பேப்பர்கள் அரசு சார்பு நிறுவனமான கோவில்பட்டி இண்டஸ்ரீஸ் கோ-ஆப்ரேட்டிவ் சொசைட்டி மூலம் கொள்முதல் செய்வதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.10,00,000 (ரூபாய் பத்து லட்சம் மட்டும் ) மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.களண். : 2026/2022/பி3 | மன்றம்<br>அனுமதிக்கப்பட்டது |
| | 30 | **பொருள் -6**<br><br>இந்நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம் பிரதான கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளான மின்மோட்டார்களை இயக்குதல், ஆய்வக உதவியாளர் மற்றும் காவலர்கள் ஆகிய பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் தினக்கூலி பணியாளர்களாக வெளிக்கொணர்வு (Out Sourcing) முறையில் 8 நபர்களை பணியமர்த்திட 2022-2023-ம் ஆண்டிற்கு பணி மேற்கொள்வதற்கு ஆகும் உத்தேச செலவு தொகை ரூபாய் 7,00,000/- (ஏழு இலட்சம் மட்டும்) குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி கோரப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு : நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் வெளிக்கொணர்வு தொடர்பான அனுமதி வரும் வரை ஏற்கனவே உள்ள ஒப்பந்ததாரருக்கு பணியினை நீட்டிக்க மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>கோப்பு எண்: இ2/1270/2021 | மன்றம்<br>அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | 31 | **பொருள் -7**<br><br>இந்நகராட்சியில் ஆனைக்குட்டம் தலைமை நீரேற்று நிலையம் மற்றும் இதர நீரேற்று நிலையங்களில் இயக்குதல் மற்றும் பேணுதல் பாதாள சாக்கடை திட்டத்தில் உள்ள வாயிற்புழைகளில் மண் அள்ளும் இயந்திரம் பொருத்திய ஆட்டோ மூலம் மண் அள்ளுதல் ஆகிய பணிகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் தினக்கூலி பணியாளர்களாக வெளிக்கொணர்வு (Out Sourcing) முறையில் 8 நபர்களை பணியமர்த்திட 2022-2023-ம் ஆண்டிற்கு பணி மேற்கொள்வதற்கு ஆகும் உத்தேச செலவு ரூ. 7,00,000/- (ஏழு இலட்சம் மட்டும்) குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி கோரப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு : நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் வெளிக்கொணர்வு தொடர்பான அனுமதி வரும் வரை ஏற்கனவே உள்ள ஒப்பந்ததாரருக்கு பணியினை நீட்டிக்க மன்றம் அனுமதிக்கலாம்.<br>கோப்பு எண்: இ2/1270/2021 | மன்றம்<br>அனுமதிக்கப்பட்டது |
| | 32 | **பொருள் -8**<br><br>விருதுநகர் நகராட்சியில் உள்ள 36 வார்டுகளுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வரும் பகிர்மானக் குழாய்கள் மற்றும் பிரதான குழாய்களில் அவ்வப்பொழுது ஏற்படும் உடைப்பு மற்றும அடைப்புகளை சரிசெய்வதற்கு சீரான குடிநீர் விநியோகம் செய்யும் பொருட்டு மேற்படி பணியினை வருடாந்திர பராமரிப்பு மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட உத்தேச செலவு தொகை ரூ. 8,00,000/- ( எட்டு லட்சம் மட்டும் ) குடிநீர் வழங்கல் நிதியில் மேற்கொள்ள கோரப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு :- மன்ற அனுமதிக்கலாம்.<br>கோப்பு எண் : இ2/1597/2022 | மன்றம்<br>அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | 33 | **பொருள் -9**<br><br>விருதுநகர் நகராட்சியில் உள்ள ஆணைக்குட்டம் பம்பிங் மெயின் மற்றும் ஒண்டிப்புலி பம்பிங் மெயின் ஏற்படும் பழுதுகளை நீக்கம் செய்ய தேவையான பைப்கள் ms காலர்கள் மற்றும் நகரில் பகிர்மான குழாய் கழிவுநீர் கலந்தால் பைப் மாற்ற தேவையான பொருட்கள் வாங்க உத்தேச செலவு தொகை ரூ.3,20,000/- மட்டும் குடிநீர் நிதியில் வழங்க மன்ற அனுமதி கோரப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு :- மன்றம் அனுமதிக்கலாம்.<br>கோப்பு எண் : இ2/ 1596/2022 | மன்றம்<br>அனுமதிக்கப்பட்டது |
| | 34 | **பொருள் -10**<br><br>விருதுநகர் நகராட்சியில் உள்ள 36 வார்டுகளில் உள்ள அடிகுழாய்களில் ஏற்படும் பழுது பணிகளை சீர்செய்யும் பொருட்டு 2022-2023 ம் ஆண்டிற்கு அடிகுழாய்கள் பராமரிப்பு பணிகள் வருடாந்திர ஒப்பந்தபுள்ளிகளின் அடிப்படையில் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.6,00,000 /- (ஆறு லட்சம் மட்டும்) குடிநீர் வழங்கல் நிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி கோரப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு :- மன்றம் அனுமதிக்கலாம்.<br>கோப்பு எண் : இ2/1595/2022 | மன்றம்<br>அனுமதிக்கப்பட்டது |
| | 35 | **பொருள் -11**<br><br>விருதுநகர் நகராட்சியில் பொது சுகாதாரம், கொரோனா தடுப்பு பணிக்கென, 18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு மெகா தடுப்பு ஊசி முகாம் மூலம் பொதுமக்களுக்கு தடுப்பு ஊசி செலுத்திட நாள் 29.01.2022 ல்– 10 (முகாம்) , 05.02.2022 ல்–10 (முகாம்), 12.02.2022 ல்–10 (முகாம்), 05.03.2022 ல்–10 (முகாம்), 12.03.2022 ல்–10 (முகாம்) அமைக்கப்பட்டு காலை 9.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது, அதன் களப்பணியாளர்களுக்கு டீ, வடை, மதியம் சாப்பாடு, கீழ் கண்ட நாட்களில் வழங்கப்பட்டுள்ளது அதற்கான செலவினம் தொகை கீழ் கண்ட | மன்றம்<br>அங்கீகரிக்கப்பட்டது |

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
விவரப்படி வழங்கிட மன்ற அனுமதி கோரப்படுகிறது.
<table>
<tr><th>வ.எண்</th><th>விநியோகம்செய்யப்பட்டஉணவு வகைகள்</th><th>நபர்கள் விபரம்</th><th>பில் நாள்</th><th>தொகை</th></tr>
<tr><td>1</td><td>மதியம் சாப்பாடு டீ வடை தண்ணீர் பாட்டில் (1லிட்டர்)</td><td>130</td><td>29.01.2022</td><td>ரூ.11492</td></tr>
<tr><td>2</td><td>மதியம் சாப்பாடு டீ வடை தண்ணீர் பாட்டில் (1லிட்டர்)</td><td>130</td><td>05.02.2022</td><td>ரூ.11492</td></tr>
<tr><td>3</td><td>மதியம் சாப்பாடு டீ வடை தண்ணீர் பாட்டில் (1லிட்டர்)</td><td>130</td><td>12.02.2022</td><td>ரூ.11492</td></tr>
<tr><td>4</td><td>மதியம் சாப்பாடு டீ வடை தண்ணீர் பாட்டில் (1லிட்டர்)</td><td>130</td><td>05.03.2022</td><td>ரூ.11492</td></tr>
<tr><td>5</td><td>மதியம் சாப்பாடு டீ வடை தண்ணீர் பாட்டில் (1லிட்டர்)</td><td>130</td><td>12.03.2022</td><td>ரூ.11492</td></tr>
</table>
<u>அலுவலககுறிப்பு</u>. மன்றம் அனுமதி வழங்கலாம். ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி நாள்.29.01.2022, 05.02.2022, 12.02.2022, 05.03.2022, மற்றும் 12.03.2022 அனுமதி பெறப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்<br>
ந.க.எண்.4518/2021/எச்1
</td>
<td></td>
</tr>
<tr>
<td></td>
<td>36</td>
<td>
<u>பொருள் -12</u><br>
விருதுநகர் நகராட்சி வார்டு எண் 1 முதல் 36 வரையிலான பகுதிகளில் உள்ள தார்சாலைகள், பாதாள சாக்கடை மற்றும் குடிநீர் பணிகளால் சேதமடைந்த தார் சாலைகள் சீர் செய்யும் பணிக்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.5,00,000/- (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) மன்ற அனுமதி கோரப்படுகிறது.<br>
அலுவலகக்குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.<br>
கோப்பு எண் : 2225/2022/இ1
</td>
<td>மன்றம் அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | 37 | **<u>பொருள் -13</u>**<br><br>விருதுநகர் நகராட்சி பகுதியில் பாதாள சாக்கடை மற்றும் குடிநீர் மராமத்து பராமரிப்பு பணிகளால் சேதமடைந்த வார்டு எண் 1 முதல் 36 வரை அமையப்பெற்ற சிமெண்ட் சாலைகளை சீர் செய்யும் பணிக்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.5,00,000/- (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) மன்ற அனுமதி கோரப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.<br>கோப்பு எண் : 2226/2022/இ1 | மன்றம்<br>அனுமதிக்கப்பட்டது |
| | 38 | **<u>பொருள் -14</u>**<br><br>விருதுநகர் நகராட்சி பகுதியில் பாதாள சாக்கடை மற்றும் குடிநீர் மராமத்து பராமரிப்பு பணிகளால் சேதமடைந்த பேவர் பிளாக் தெருக்கள் வார்டு எண் 1 முதல் 36 வரை அமையப்பெற்ற தெருக்களில் பேவர் பிளாக் தளம் சீர் செய்யும் பணிக்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.5,00,000/- (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) மன்ற அனுமதி கோரப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.<br>கோப்பு எண் : 2227/2022/இ1 | மன்றம்<br>அனுமதிக்கப்பட்டது |
| | 39 | **<u>பொருள் -15</u>**<br><br>விருதுநகர் நகராட்சி பகுதியில் பாதாள சாக்கடை மற்றும் குடிநீர் மராமத்து பராமரிப்பு பணிகளால் மேற்கொள்வதற்கு தேவையான 3 குதிரை வேக சக்தி கொண்ட மோட்டார்கள் 2 எண்ணம் வாங்குவதற்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.80,000/- (ரூபாய் எண்பதாயிரம் மட்டும்) மன்ற அனுமதி கோரப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.<br>கோப்பு எண் : 2228/2022/இ1 | மன்றம்<br>அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr>
<td></td>
<td>40</td>
<td>
<u>பொருள் -16</u><br><br>
இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.19, பெரிய பள்ளிவாசல் தெருவில் உள்ள சிறுபாலத்தில் மூடுபலகை உடைந்துள்ளதை அகற்றிவிட்டு ஆர்.சி.சி மூடுபலகை அமைப்பதற்கு உண்டான பணியினை பொது நிதி 2021–22 ம் ஆண்டின் கீழ் ரூ.45.00 இலட்சம் மதிப்பீட்டில் செலவினங்களை மேற்கொள்வதற்கு இந்நகர் மன்றத் தீர்மான எண்.1148.நாள்.25.01.2022ன்படி அனுமதி அளித்துள்ளது. அதன் பேரில் மேற்காணும் பணிகள் மேற்கொள்ள 18.03.2022ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டன அன்றைய தேதியில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. வரப்பற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ எண்</th><th>ஒப்பந்ததாரர் விபரம்</th><th>மதிப்பீட்டு விலை விகிதம்</th></tr>
<tr><td>1</td><td>திருமதி .வி.மேனகா,விருதுநகர்</td><td>மதிப்பீட்டைக் காட்டிலும் 0.41 சதவிகிதம் குறைவு.</td></tr>
<tr><td>2</td><td>திரு.கே.ஜீ.ராஜகுரு–விருதுநகர்.</td><td>மதிப்பீட்டைக் காட்டிலும் 5.03 சதவிகிதம் அதிகம்.</td></tr>
</table>
<br>
அலுவலகக் குறிப்பு- வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மதிப்பீட்டு விலையைக் காட்டிலும் குறைவாக அளித்துள்ள திருமதி.வி.மேனகா, ஒப்பந்ததாரர், விருதுநகர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.<br>
கோப்பு எண் : இ1/24–2/2022
</td>
<td>மன்றம் ஏற்கப்பட்டது</td>
</tr>
</table>